புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# காலம் கடந்து வாழும் பொதுமறையில் - பண்பாடு

கே. ரோ. கேபா ஜெயின்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி,
பள்ளத்தூர் - 630107.

## முன்னுரை

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் முதலாவதாக இடம்பெறுவது திருக்குறள். முப்பால் என்றப் பெயரால் இது சுட்டப்பட்டுள்ளது. இதில் கூறப்படாத நீதிகளே இல்லை எனலாம். சாதி, மதம், இனம் கடந்து நிற்பதால் இது காலம் கடந்து நிற்கக் கூடியது. இது தமிழ் மொழிக்குக் கிடைத்த அரிய நீதி நூல். எக்காலத்துக்கும் பொருத்தமுற அமைக்கப்பட்ட அழியாக் காவியம் திருக்குறள்.தமிழ் மக்களின் பண்பாட்டுப் பதிவுகளையும் தன்னுள் கொண்டு விளங்குகின்றது.

## சிறப்பு

சிறு அடிகளில் உலகை அளந்து கூறும் பண்பு இதன் சிறப்பம்சமாகும். திருக்குறள் பல்வேறு அடை மொழிகளால் சுட்டப்படுகின்றது. அவை உத்தரவேதம், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ் மறை என்பவைகளே. இதனை வழங்கிய வள்ளல் பெருமானை நாயனார், தேவர், முதற்பாவலர், மாதானு பங்கி, தெய்வப்புலவர், செந்நாப்போதார்,பெருநாவலர் என பலப் பெயர்களால் புகழ்கின்றனர்.

உலக மொழிகளில் பைபிளுக்கு அடுத்தபடியாக பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது இதன் பெருமையாகும். தமிழின் முதல் எழுத்தாகிய ‘அ’ கரத்தில் தொடங்குகிறது திருக்குறள்.

“ அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு” (குறள் – 1)

தமிழின் இறுதி எழுத்தாகிய ‘ன்’ என்று கடைசி குறட்பா முடிகிறது.

“ ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்” (குறள் – 1330)

சங்கம் வைத்து தமிழ் மொழியை வளர்த்த சங்க காலத்தை பொற்காலம் எனக் குறிப்பிடுகின்றனர்.அக்காலத்தில் பல நூல்கள் தோன்றியுள்ளன. ஆயினும் கள் குடித்தல், பரத்தையர் தொடர்பு போன்றவை தவறெனச்சுட்டப்படவில்லை. ஆனால் சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய நூல்களில் நீதிநூல்கள் அதிகமாக தோற்றம் பெற்றன. சிறந்த நீதி நூலாகிய திருக்குறளில், தமிழ் மக்களின் பண்பாட்டுக் கூறுகளையும் காணலாம்.

## அமைப்பு

இந்நூல் 133 அதிகாரங்களையும் 1330 பாடல்களையும் கொண்டுள்ளது. மூன்று பிரிவுகளாக அறம், பொருள், இன்பம் எனப் பிரிக்கப்பட்டுள்ளது. அறத்துப்பால் 38 அதிகாரங்களையும், பொருட்பால் 70 திகாரங்களையும், காமத்துப்பால் 25 அதிகாரங்களையும் கொண்டுள்ளது.

## பாராட்டுரைகள்

திருக்குறளின் சிறப்பினை உணர்ந்த சான்றோர்பெருமக்கள் இந்நூலைப் புகழ்ந்துள்ளனர்.

*" அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி*
*குறுகுத் தறித்த குறள்"*
*என ஔவையார் திருக்குறளின் சிறப்பை உணர்ந்து போற்றுகின்றார்.*
*"எல்லாப் பொருளும் இதன் பால் உள இதன் பால்*
*இல்லாத எப்பொருளும் இல்லை"*
*என மதுரைத் தமிழ்நாகனார் இதன் முழுமையை அறிந்து பாராட்டியிருக்கின்றார்*

*"உலக மொழிகளில் சுருக்கமாகவும் திறம்படவும் அறிவுப் பூர்வமான பாடல்களை நமக்குச் சொல்வதற்குத் திருக்குறளுக்கு ஈடு இணை எம்மொழியிலும் இல்லை" எனக் கூறியவர் செர்மன் பேரறிஞர் ஆல்பர்ட் ஸ்வைட்சர்.*

*"வள்ளுவர் செய் திருக்குறளை குறைவறநன் குணர்ந்தோர்கள்*
*உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக்கு ஒரு நீதி"*
*எனப் பாராட்டியவர் மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை.*
*" வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து*
*வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"*
*எனப் போற்றியவர் பாரதியார்*

*பண்பாட்டுப்பதிவுகள்*

*மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான அத்தனையும் தன்னுள் கொண்டு ஒளிவீசும் திருக்குறளின் கருத்துக்களை படித்து, உணர்ந்து செயல்பட்டால் மனிதன் சிறப்பாக வாழலாம். அவற்றுள் ஒருசில கருத்துக்கள்.*

*இப்பரந்த உலகம் உனதாக வேண்டுமானால் கிடைத்துவிடும். எவ்வாறெனில்,*
*"ஞாலம் கருதினும் கை கூடும் காலம்*
*கருதி இடத்தாற் செயின் "* *(குறள் – 484)*
*ஒரு செயலை செய்ய வேண்டிய காலமும் முறையும் அறிந்து காரியத்தைச் செய்ய முற்பட்டால் அது உலகையே அடைய விரும்புகிற காரியமானாலும் கைகூடும் எனச் சொல்லி மக்களின் உள்ளுணர்வுகளைத் தட்டி எழுப்புகின்றார் வள்ளுவர்.காலம் தாழ்த்தாது நினைத்த செயலை உடனே செய்யும் போது வெற்றிநிச்சயம்என்பதை உணர வைக்கின்றது.*

*நாட்டை ஆளுகின்ற மன்னன் எப்போது மதிக்கப்படுவான் என்பதைக் கூறும்போது, 'குடிதழீஇ .கோலோச்சும் போது' எனக் கூறுகின்றார்.அதாவது தன் குடிமக்களை எண்ணி அவர்களின் கருத்திற்கிணங்க ஆட்சிபுரியும் போது மன்னன் மதிக்கப்படுவான் என்கிறார்*

*வரவு செலவு திட்டத்தினைக் கூறும் போது, பொருளை உருவாக்குவதும், சேர்த்து வைப்பதும், சேர்த்து வைத்த பொருளை சரியான வழியில் பயன்படுத்தவும் மன்னன் அறிந்திருக்க வேண்டும் என்பதை உணர்த்தியுள்ளார்.*

*எல்லா மனிதர்களும் மிக முக்கியமாக கடைபிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறியைபின்வரும் நூற்பா தன்னுள் கொண்டுள்ளது*
*"ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை*
*போகாறு அகலாக் கடை"* *(குறள் – 478)*
*பொருள் வந்து சேருகின்ற வழியின் அளவு சிறியதாக இருந்தாலும் பரவாயில்லை. பொருள் போகும் வழி அதாவது செலவு பெரியதாக அதிகமாக இல்லாவிட்டால் தீமையில்லை.*

*மனிதன் வரவு செலவு கணக்கு பார்க்காமல் தான் விரும்பியவற்றை வாங்கி செலவு செய்து இறுதியில் வாழ வழியின்றி தவிக்கும் சூழல் உருவாகக்கூடாது என்னும் நோக்கோடு 'வலி அறிதல்' என்ற தலைப்பில் அமைந்த கடைசி நான்கு பாடல்களில் மனிதர்கள் செல்வத்தை எவ்வாறு செலவிட வேண்டும் என்பதைப் பற்றி தெளிவாக விளக்கியுள்ளார்.*

*மேலும் பெண்மையை கூறும் போது,*
*"இல்லது என் இல்லவள் மாண்பு ஆனால் உள்ளது என்*
*இல்லவள் மாணாக் கடை"* *(குறள் – 53)*
*குணநலம்மிக்க குலக்கொழுந்து மனைவியாகக் கிடைத்து விட்டால் குடும்பத்தில் இல்லாதது என்ன? எல்லாமே உண்டு.இல்லறம் சிறக்கும்.மனம் வீசும் எனப் புகழ்கின்றார்.*

*கல்வியின் சிறப்பினை மிகவும் தெளிவாக விளக்குகின்றார்.*

. " தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு " (குறள் – 396)

ஒருவன் படிக்க படிக்க அறிவு பெருகும்.எதைப் போல எனில் கிணற்றிலிருந்து நீர் எடுத்த பின்பும் சுரப்பது போல என உதாரணம் காட்டுகின்றார்.கல்வி அறிவு பெருகும் போதுமனிதன் உன்னத நிலையை அடையலாம் என்பதை உணர்த்துகின்றது.

நட்பு என்ற அதிகாரத்தில் சிறந்த நட்பு எவ்வாறு அமையும் என்பதைக் காணலாம்

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு" (குறள் – 788)

தம் உடையானது அவிழும்போது தன்னுடைய கை தன்னை அறியாமலே சரிசெய்வதைப் போல நட்புடையோர் துன்பப்படும்போது உதவுவது நண்பனின் கடமை என வலியுறுத்தியுள்ளார் வள்ளுவர்.

பொருளைச்சார்ந்தே வாழ்வியல் அமைவதால் 'பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்கின்றது திருக்குறள்.மனிதன் உயிர் வாழ்வதற்கு நுகர் பொருள் தேவை. 'செய்க பொருளை' எனத் தொடங்கும் குறளில் செல்வத்தைச் சேருங்கள் எனக் கூறியுள்ளார்.

உணவுப் பொருட்களை உற்பத்திச் செய்ய வேண்டும்.வயிற்றுக்குச் சோறிட வேண்டும் – இங்கு வாழும் மனிதருக்கெல்லாம் என்ற பாரதி "தனியொருவனுக்கு உணவில்லையெனில் சகத்தினை அழித்திடுவோம்" என்கிறார்.

உலகில் வாழும் மனிதர்களுக்கெல்லாம் உயிர்வாழ்வதற்குத் தேவையான உணவினைக் கொடுப்பவர்கள் அவர்களுக்கு உயிர் கொடுத்ததற்கு சமம் என மணிமேகலைக் காப்பியம் சுட்டுகின்றது.

"மண் திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"

தமிழ் இலக்கியங்களில் உணவின் முக்கியத்துவத்தை காண முடிகின்றது.திருவள்ளுவரும் பசி பட்டினி இல்லாத நாட்டை தன் மனக்கண் முன் நிறுத்தியிருக்கின்றார்.

அழியாத புகழ்

இம்மை மாறி மறுமையாயினும் குறளானது காலங்களைக் கடந்து நிற்கும். திருவள்ளுவருக்கு குமரிக்கடற்கரை உட்பகுதியில் 133 அடியில் சிலை நிறுவப்பட்டுள்ளது. திருவள்ளுவர் பெயரில் விருதுகள் வழங்கி வருகின்றனர். நாணயத்தின் ஒருபுறம் திருவள்ளுவரின் உருவமானது பொறிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு காலத்தால் அழியாத புகழைப் பெற்றுள்ளது திருக்குறள்.

முடிவுரை

வள்ளுவர் கூறியுள்ள கருத்துக்கள் அனைத்தையும் கைக்கொண்டு மனித இனம் செயல்படுமானால் துன்பங்கள் அகலும்,அன்பு பெருகும்,பண்பாடு போன்றவை வளரும்.உலகமே அழியாமல் நிலைபெற்று விளங்கும்.மக்களுக்கு நிலையான வாழ்வளிக்கும் கருத்துப் பெட்டகமாகத் திருக்குறள்விளங்குகின்றது.உலக மக்கள் அனைவரும் ஏற்கும்பொதுமறையாகியதிருக்குறள் பண்பாடுகளை உணர்த்தும் அரிய பெட்டகமாகவும் திகழ்கின்றது.

துணை நூற்கள்:

1. புலியூர்க்கேசிகன், மணிமேகலை, பாரிநிலையம், 184, பிராட்வே, சென்னை– 600108
2. மாணிக்கவாசகன் ஞா, திருக்குறள், உமா பதிப்பகம், 58, ஐயப்பசெட்டி தெரு , மண்ணடி, சென்னை– 600 001.
3. திருமகள் நிலையம், பாரதியார் கவிதைகள் , வெங்கட் நாராயணா சாலை, தி.நகர் , சென்னை – 600 017.

********* ********* ********** ********* ********* ********** ********** **********